விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 318 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 16 வியாழக்கிழமை (02.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தேர்தலைப் பிற்போட இடமளியேன் பெரமுன தேர்தலை எதிர்பார்த்திருக்கின்றது

### பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

தேர்தலைப் பிற்போட இனியும் இடமளிக்க மாட்டோம்என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன தேர்தல்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளதன் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் அடுத்த வருடம் நடைபெற வேண்டும்.

தேர்தலைப் பிற் 15

## இலங்கை வந்தார் இந்திய நிதி அமைச்சர்

- நல்லூர், பொது நூலகம் மற்றும் யாழ்.கலாசார மையத்துக்கு இன்று விஜயம் செய்யவுள்ளார்.
- கண்டி மல்வத்தை மகாநாயக்கரிடம் நேற்று ஆசீர்வாதம் பெற்றார்.
- ஜனாதிபதி ரணில் உட்பட அரசியல் தலைவர்களை சந்திக்கவுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பு

### தயாரானது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தயாராகி வருகின்றது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் இன்று வியாழக்கிழமை முதல் மாகாண ரீதியில் 24 மணி நேர அடையாள பணிப் 15

### கியூ.ஆர் குறியீடுகளுடன்

## புதிய சாரதி அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

தற்போதுள்ள குறைகடத்தி சிம்களுக்குப் (sim card) பதிலாக கியூ.ஆர் குறியீடுகளுடன் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் 15

### யாழ்.பல்கலையில்

## மாவீரர் நினைவுத் தூபிக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபி துப்புரவு செய்யப்பட்டு ஈகச் சுடர் ஏற்றப்பட்டது. 15

## நவம்பர் 13 'பட்ஜெட்' டிசம்பர் 13 'வாக்கெடுப்பு'

### 26 நாட்கள் விவாதம்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நவம்பர் 13ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பட்ஜெட் தொடர்பான விவாதம் தொடர்ந்து 26 நாட்கள் நடைபெற்று டிசம்பர் 13ஆம் திகதி பட்ஜெட்டுக்கான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் (ஒதுக்கீட்டுச் 15

### திருக்கோணேச்சர ஆலயத்தில்

## நிர்மலா சீதாராமன் இன்று வழிபடுவார்

(திருகோணமலை)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று காலை திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்துக்கு சென்று வழிபடுவதுடன் ஆலயப் புனரமைப்புக் குறித்து ஆலய பரிபாலன சபை 15

## முல்லையில் ஷெல்கள் மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளியவளை பகுதி 15

## தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை முன்னிட்டு

### தலைமன்னார் முனையத்தை துறைமுகமாக பெயரிடத் தீர்மானம்

(கொழும்பு)

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை நடைபெறவுள்ள நிலையில் தலைமன்னார் முனையத்தினை துறைமுகமாக பெயரிடத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தலைமன்னார் முனையத்தை அண்மித்த பகுதியை துறைமுகமாக வர்த்தமானியில் பெயரிடுவதற்கு கப்பற்றுறை மற்றும் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Yarl IT Hub இன் மாபெரும்
# புத்தாக்கத் திருவிழா

## நவம்பர் மாதம்

# 03 04 05

## யாழ் கலாசார மத்திய நிலையத்தில்

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும்
பயன்பெறும் ஒரு கொண்டாட்டம்

# ஒருக்கா வந்து பாருங்கோ என..

- மாணவர் புத்தாக்கக் கண்காட்சி
- அனுபவ கற்கைகள்
- Enlighting talks
- Pitching Compition
- செய்நிரலாக்க போட்டி
- Master Classes
- புத்தொழில் கண்காட்சி
- Maker Space
- Fun Activities
- Networking Sessions
- ரோபோட்டிக் போட்டி
- பானை, கைத்தறி பயிற்சி
- விளையாட்டுகள்
- Eco System meetup
- மற்றும் பல
- தொழில்நுட்பங்களின் அறிமுகம்

(17641)

YGC INNOVATION FESTIVAL '23
03, 04, & 05 NOVEMBER

## YGC Innovation Festival '23

IT HUB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில்

## சுகாதார ஊழியர்கள் போராட்டம்













(சாவகச்சேரி)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் உள்ள ஆதார மருத்துவமனைகளில் சுகாதார ஊழியர்கள் நேற்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது "அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் மேலதிக நேர கொடுப்பனவு,விடுமுறை தின சம்பள வரைமுறையை நீக்குதல், ஓய்வூதிய சம்பளத்தை உறுதிப்படுத்தல், சுகாதார ஊழியர்களுக்கு வாரத்திற்கு 40மணிநேர வேலைத்திட்டத்தை வழங்கல், தற்போது வழங்கப்படும் ரூ 1000 விசேட கொடுப்பனவை 7000ஆக உயர்த்துவதுடன் சீருடைத் தொகையை 15,000 வரை அதிகரித்துக்கொள்ளல், மருந்துகள் மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறையை விரைவாக நிவர்த்தி செய்தல், சத்திரசிகிச்சைகளை வழமை போல் நடத்தல், ஊழியர் பற்றாக்குறையின் போது ஆட்சேர்ப்பு செய்தல், அனைத்து பதவி உயர்வுகள் வழங்குவது தொடர்பாகவும் முன் நடவடிக்கை எடுத்தல் மற்றும் முறையான இடமாற்ற முறையொன்று உருவாக்கல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து குறித்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (5-6-30-104-250-285-299-316)

## பாடசாலை மாணவர்களுக்கு சலுகை விலையில் புத்தகங்கள் வழங்கத் தீர்மானம்

### கல்வி அமைச்சர்



(கொழும்பு)

அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் அனைத்துப் பாடசாலைகளுக்கும் முப்பது வீதச் சலுகையில் பயிற்சிப் புத்தகங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, பாடசாலைகளில் பயிற்சிப் புத்தகங்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் சுற்றறிக்கை வெளியிடவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரச அச்சக சட்டப்படுத்தப்பட்ட கழகம் நூற்று இருபத்தைந்து கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளதாகவும் தேவையான அளவு புத்தகம் அச்சிடுவதற்கு கழகம் தயாராக உள்ளதாகவும் தற்போது மாநகராட்சிக்கு காகித தட்டுப்பாடு இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (5-6)

## மயிலத்தமடுவில் குடியேறியவர்களின் அட்டூழிய செயல்கள் அதிகரிப்பு

### பண்ணையாளர்கள் கவலை

(மட்டக்களப்பு)

"மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அத்துமீறிய குடியேற்றவாசிகளினால் பல்வேறு அட்டூழியங்கள் அரங்கேற்றப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்" எனவும் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சித்தாண்டி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் முன்னெடுத்துவரும் போராட்டமானது 47 ஆவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அத்துமீறிய குடியேற்ற செயற்பாட்டாளர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும்முன்னெடுக்காத நிலையில் நாம் எமது வாழ்வாதாரத்தினை இழந்து தவித்து வருகின்றோம்" எனக்கவலை தெரிவித்துள்ளனர். (5-6)

## பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியமில்லை

### கெமுனு விஜேரத்ன

(கொழும்பு)

டீசல் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பேருந்து கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது பேருந்து கட்டணத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாவிட்டாலும் எதிர்காலத்தில் டீசலின் விலை மேலும் அதிகரிக்கப்பட்டால் நிச்சயமாக பேருந்து கட்டணத்திலும் மாற்றங்கள் கொண்டு வரப்படும் என அந்த சங்கத்தின் பொதுச்செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் விலையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் பேருந்து கட்டணத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன சிங்கள ஊடகம் ஒன்றிடம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## டொலருக்கு நிகராக வலுக்கும் இலங்கை ரூபா

(கொழும்பு)

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் நேற்றைய தினம் வரையிலான காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 10.9 சதவீதத்தால் வலுவடைந்துள்ளது.

மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, யூரோ, ஸ்ரேலிங் பவுண்ட், ஜப்பானின் யென் மற்றும் இந்திய ரூபாய் என்பவற்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியும் வலுவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செப்டெம்பர் மாதம் இறுதி வரையில் இலங்கையின் மொத்த வெளிநாட்டு கையிருப்பு 3.5 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## மு.சக்கரவண்டி கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை

### லலித் தர்மசேகர

(கொழும்பு)

எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட்ட போதிலும் முச்சக்கரவண்டி கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என அகில இலங்கை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்குமாயின் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படும் என அதன் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் ஆண்டு

# நினைவலைகள்

மலர்வு
10 - 05 - 1946

உதிர்வு
02 - 11 - 2004



அமரர் **கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்**

(ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஊர்காவற்றுறை)

நினைவழியா நாட்களில்...
அது ஒரு நிலாக்காலம்!!
முற்றத்து வெண்மணலில்
வேப்பம் வாங்கு வெளியே வந்துவிடும்
ஆளுக்கொரு ஆசனம் அதைச்சுற்றி
அடுத்தடுத்துப் பிறந்தமையால்
ஆருக்கென்று போட்டி
"அப்பா" தலைமையில் நடக்கும்
ஓர் உச்சி மாநாடு
அம்மா மட்டும் அடுப்படியில்
எண்ணெயில் பொரியப் பொரிய
எடுத்து வரப்படும் உழுந்து வடையுடன்
தேனீரும் கிடைக்கும் வாய்க்கிதமாய்
நடுச்சாமம் கடந்தும்
தாலாட்டும் குறட்டை ஒலி
தந்தையின் அரவணைப்பில்
பிஞ்சுகளாய் உறங்கிய அந்நாட்கள்
என்றுமே நினைவழியாது
மீண்டும் இனிவருமோ அக்காலம்!!!

நீங்கா நினைவுடன்:-
நின் மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

(17642)

# தென்னாபிரிக்கா வெற்றி




நியூஸிலாந்துக்கு எதிரான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் தென்னாபிரிக்காவுக்கு உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் அரையிறுதிக்கு முன்னேற பிரகாசமான வாய்ப்புள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கட் தொடரின் 32 வது போட்டி தென்னாபிரிக்கா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று இடம்பெற்றது.

புனேயில் இடம்பெற்ற இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.


அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில், 4 விக்கட்டுக்களை இழந்து, 357 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் வான் டெர் டுசென் மற்றும் குயின்டன் டி கொக் அபாரமாக விளையாடி சதம் கண்டனர்.

358 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி துடுப்பாடிய நியூஸிலாந்து அணி 35 ஓவர்கள் நிறைவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக வான் டெர் டுசென் தெரிவானார். (ம-7)

# மரண அறிவித்தல்



மலர்வு
22.07.1944

உதிர்வு
31.10.2023

தேசபந்து, கலாநிதி

## இராசையா இராமச்சந்திரன்

(அகில இலங்கை சமாதான நீதவான்)

(உரிமையாளர் – மெடிகெயார் பார்மசி,சுன்னாகம்)

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் ஓய்வு பெற்ற மருந்தாளரும் அளவெட்டி - மல்லாகம் பல்நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் முன்னாள் தலைவரும் லயன்ஸ் கழகம், மனித உரிமைகள் இயக்கம் மற்றும் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை என்பவற்றின் முன்னாள் உறுப்பினரும் ஆவார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மற்றும் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட இராசையா இராமச்சந்திரன் அவர்கள் 2023.10.31 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற - கந்தையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயலட்சுமியின்(ஓய்வு பெற்ற மருந்தாளர்) அன்புக் கணவரும் மதுராந்தகி(பிரதம செயலாளர் செயலகம் - வடக்கு மாகாண சபை), திருவரங்கன்(கொழும்பு), யசோதரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஜபதி(சட்டப்பிரிவு, கிழக்கு மாகாண சபை), யாழினி(கொழும்பு), சுபகா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தக்ஷாயனி, பிரித்திகா, அவந்திகா, ஆருஷன் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற விசாலாட்சி மற்றும் மகேஸ்வரி, நாகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கனகராஜா மற்றும் நாகேந்திரம், சாம்பசிவம், இராஜலட்சுமி(கனடா), தனலக்ஷ்மி, தெய்வேந்திரம்(கனடா), வன்னியசேகரம்(கனடா), சந்திரசேகரம் (அமெரிக்கா), தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(03.11.2023) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மல்லாகம், பங்களா ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் - அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


பங்களா ஒழுங்கை,
மல்லாகம்.
021 224 0976

(17643)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகளை வழங்கி காலம் தாழ்த்தும் ரணில்



(கொழும்பு)

"வாக்குறுதிகள் வழங்கிக் காலத்தை இழுத்தடிக்கலாம் என்று ஜனாதிபதி தப்புக்கணக்குப் போடுகின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் இதுவரை நிறைவேற்றவில்லை. தேர்தல்கள் தொடர்பில் அவர் அண்மையில் வழங்கிய வாக்குறுதியையாவது நிறைவேற்ற வேண்டும் என சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தலும் அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறும். அத்துடன் 2025ஆம் ஆண்டில் மாகாணசபைத் தேர்தல் இடம்பெறும் என்றும் தேர்தல்கள் தொடர்பில் வழங்கிய இந்த வாக்குறுதியையாவது நிறைவேற்ற வேண்டும்.

தற்போதைய அரசு மக்கள் ஆணையை இழந்த அரசு. அந்த அரசு தெரிவு செய்த ஜனாதிபதியும் மக்கள் ஆணையை இழந்தவராகவே கருதப்படுவார்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் காலம் தாழ்த்தாது விரைந்து நடத்தப்பட வேண்டும். என்னைச் சந்திக்கின்ற சர்வதேச பிரதிநிதிகளிடமும் இதனை நான் எடுத்துரைத்து வருகின்றேன் எனத் தெரிவித்தார். (5-6)






# இராசிபலன்

02.11.2023
ஐப்பசி 16, வியாழக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 12.40 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 7.44 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை

சந்திராஷ்டமம் - அனுசம்

**வளவன்**

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** உடல் நலனில் கவனம் தேவை, மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மகரம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** வாக்கு மேன்மையுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை எடுப்பீர்கள்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், திருடர் பயமுண்டு.

**கும்பம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு** காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

**மீனம்** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், சுபவிரயங்கள் கூடும் நாள்.

கல்வியறிவும் சிந்தனையறிவும் இருந்தால் எதையும் சாதிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் அபிவிருத்திக்கு பூரண ஆதரவை வழங்குவோம்

## உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும் என உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அன்னாபி ஜெர்டே தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கடந்த திங்கட்கிழமை உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அன்னா பிஜெர்டே மற்றும் அவரது குழுவையும் பெண்கள், சிறுவர்கள் துறை சார்ந்த தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடல் இடம்பெற்றது.



ஆளுநர் வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தியதுடன், எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பதைக் கண்டறிவதில் பெரும் சவால்களை எதிர்கொள்வதாகவும் கல்வி, சுயதொழில் உட்கட்டமைப்பு மற்றும் சிறுவர், பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் வடக்கு மாகாணத்திற்கு ஆதரவளிக்குமாறும் உலக வங்கி பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இவற்றைக் கேட்டறிந்த உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து தாம் மிகவும் கவனத்தில் கொள்வதாகவும் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களுக்கு தாம் கைகொடுப்பதாகவும் கூறியிருந்தார்.

மேலும் எதிர்காலத்தில் வடக்கு மக்களின்வாழ்க்கையை மேலும் மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவை வழங்கும் என உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் உறுதியளித்தார். (5-6-33-104)



யாழ்.பல்கலைகழகத்தில் படுகொலை செய்யப்பட்ட கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் புருசோத்தமனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று பல்கலை வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. (படம்:- சிவசாந்தன்)

# காணிப்பதிவக இணைய சேவையை பெற முடியாத நிலையில் மக்கள்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் பதிவாளர் திணைக்களத்தின் நிகழ்நிலை சேவைகளுக்கு ஊடாக காணிப் பதிவு, உறுதி, புத்தகப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்ற போதிலும் யாழ். மாவட்ட காணிப் பதிவகத்தின் ஊடாக நிகழ்நிலை சேவைகளைப் பெற முடியாது என மாவட்ட காணிப் பதிவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

பதிவாளர் திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பலருக்கு நீண்ட காலமாகப் பதிலேதும் கிடைக்காத நிலையில், பதிவாளர் நாயக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது, நாடளாவிய ரீதியில் நாட்டிலுள்ள சகல காணிப் பதிவகங்களின் ஊடாகவும் நிகழ்நிலை சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் அந்தந்தக் காணிப் பதிவகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால், யாழ்ப்பாணத்தில் உள்ள காணிப் பதிவகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பதிவாளர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு வினவிய போது, யாழில் அத்தகைய சேவைகள் எதையும் நிகழ்நிலை ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியாது எனவும், தேவையாயின் நேரில் வருமாறும் தெரிவிக்கப்பட்டது.

நேரத்தையும், மனித வலுவையும் அரசாங்கம் பல வழிகளில் நிகழ்நிலையூடாக இலகுபடுத்தல்களை ஆரம்பித்துள்ள போதிலும், அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் தொழில்நுட்ட அனுகூலங்களை அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (5-6-33)

# 5 லீற்றர் கசிப்பு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் 5 லீற்றர் கசிப்புடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு வியாபாரம் நடைபெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டுக்கு சென்று சோதனை நடத்திய போது 5 லீற்றர் கசிப்பை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டில் இருந்த 27 வயதான பெண்ணை கைது செய்தனர். (5-6-33)

# வழிபாட்டுக்குச் செல்லும் பெண்களிடம் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட நபர் கைது

## களவாடப்பட்ட பொருட்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கௌரிகாப்பு விரத வழிபாட்டுக்கு செல்லும் பெண்களை இலக்கு வைத்து , வழிப்பறி மற்றும் சங்கிலி அறுப்பு போன்ற கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


யாழைச்சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியில் உள்ள ஆலயத்திற்கு செல்லும் பெண்களிடம் ஆள்நடமாட்டம் குறைந்த நேரத்தை பயன்படுத்தி , வழிப்பறியில் கும்பல் ஒன்று ஈடுபட்டு வந்துள்ளது.

குறித்த கும்பலால் சங்கிலி உள்ளிட்ட நகைகள், பெறுமதியான கையடக்க தொலைபேசிகள், கைப்பைகள், அவற்றில் இருந்த வங்கி அட்டைகள் உள்ளிட்ட ஆவணங்கள் மற்றும் பெரும் தொகையான பணம் என்பவை வழிப்பறி கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்த நிலையில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கொள்ளையடிக்கப்பட்ட 10 பவுண் சங்கிலி, கைப்பைகள், கையடக்கதொலைபேசி மற்றும் வழிப்பறிக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்று என்பன கைப் பற்றப்பட்டதுடன் சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில்தடுத்துவைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-6-33)




# சங்குப்பிட்டி பாலம் உட்பட சுமார் 30 பாலங்கள் மோசமான நிலை

(அராலி)

யாழ்ப்பாணம் சங்குப்பிட்டி பாலம் உட்பட நாடளாவிய ரீதியில் மிக மோசமான நிலையில் சுமார் 30 பாலங்கள் காணப்படுவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இனங்காணப்பட்டுள்ள பாலங்களில் சில தற்போது தற்காலிக திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

மிக மோசமாக பாதிப்படைந்துள்ள பாலங்களை புனரமைப்பதற்கு பாரிய நிதி தேவையாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு கிடைக்கும் பற்றாக்குறையான வருமானத்திலேயே இவற்றுக்கும் நிதி ஒதுக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில்தான் பாலங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றுக்கு பெருந்தொகை பணம் தேவைப்படுகிறது எனத் தெரிவித்தார். (5-6-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊதியம் அதிகரிக்கப்படும் எனக்கூறி மக்களை ஏமாற்ற வேண்டாம்

## ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

பொருட்களின் விலைகள் மூன்று மடங்கு அதிகரித்துள்ள நிலையில் எதனடிப்படையில் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். இந்நிலையில் பொருட்களின் விலை மூன்று மடங்காகவும் மின் கட்டணம் நான்கு மடங்காகவும் ஏனைய செலவுகள் அனைத்தும் வரம்பில்லாமல் அதிகரித்துள்ள இந்த நேரத்தில்,அரச ஊழியர்களின் சம்பளத்தை எவ்வளவால் அதிகரிப்பீர்கள் என ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியுள்ளது. (5-6)

# மக்கள் சனத்தொகை கணக்கெடுப்பு ஆரம்பம்

(கொழும்பு)

பத்து வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் சனத்தொகை மற்றும் வீடமைப்புக் கணக்கெடுப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்ட முதல் கட்டடமாக ஜனாதிபதி செயலகம் பட்டியலிடப்பட்டுள்ளது.

தரவு சேகரிப்புக்கு அச்சிடப்பட்ட ஆவணங்களுடன் டெப்லெட்டுகளைப் பயன்படுத்துவதே இவ்வருட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் சிறப்பான அம்சமாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. இறுதியாக 2012 ஆம் ஆண்டு மக்கள் சனத்தொகை கணக்கிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# மருந்து இறக்குமதி தொடர்பில் அதிகாரிகளுக்கு பத்திரன பணிப்புரை

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட மருந்துகளை மாத்திரம் இலங்கைக்கு கொண்டு வருமாறும் பதிவு செய்யப்படாத மருந்துகள் நாட்டிற்கு கொண்டு வரப்படும் பட்சத்தில் அந்த மருந்துகள் பற்றிய தேவையான தரவுகளை சரிபார்த்து தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையினால் அனுமதி பெறுமாறும் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபை, அரச மருந்துக் கூட்டுத்தாபனம், அரச மருந்துப் பொருட்கள் சட்டப்பூர்வமாக்கப்பட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மருத்துவ விநியோகப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் மேற்படி முறைக்கு புறம்பாக எவரேனும் செயற்பட்டால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்தார்.

அத்துடன், அவசரகால கொள்வனவுகளின் கீழ் மருந்துகளை கொள்வனவு செய்வதை இடைநிறுத்துமாறும், பற்றாக்குறையாக உள்ள மருந்துகளை பரிந்துரைக்கப்பட்ட முறையில் விரைவில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (5-6)

# அரசு எடுக்கும் முடிவுகளால் பாதிப்படைவது பொது மக்கள்

## நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கம் எடுக்கும் முடிவுகளினால் பாதிப்படைவது நம் நாட்டின் மக்கள் என ஜே.வி.பி உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கடந்த திங்கட் கிழமை கொழும்பில் உள்ள ஜே.வி.பி கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றுள்ள செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் மக்களின் வாழ்வாதாரம் அதிகரித்துள்ளது .இதற்கு இச் சம்பளம் கூட போதாது

மேலும் மின்சார கட்டணம், எரிபொருள் விலை என அத்தியாவசியப் பொருட்களின் விலை அடுத்தடுத்து உயர்ந்த வண்ணம் உள்ளது என தெரிவித்தார்.(5-6)

# எல்ல பகுதியில் துப்பாக்கி பிரயோகம்

## ஒருவர் காயம்

(கொழும்பு)

எல்ல பகுதியில் நேற்றிரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உந்துருளியில் பிரவேசித்த இருவர், குறித்த பகுதியிலுள்ள சுற்றுலா விடுதியொன்றை இலக்கு வைத்துத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் விடுதிக்கு அருகில் இருந்த ஒருவர் காயமடைந்த நிலையில் தெமோதர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சுற்றுலா விடுதியின் ஊழியரான, மீட்டியாகொட பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (5-6)


## வேலையாட்கள் தேவை

**முதியோர் ஆச்சிரமம் கீரிமலை**

சிவபூமி முதியோர் ஆச்சிரமத்திற்கு முதியோர் பராமரிப்பாளர் தேவை. தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ் காணும் முகவரிக்கு தங்கள் சுயவிபரத்தை அனுப்பி வைக்கவும்.

**சிவபூமி பூங்கா கோண்டாவில்**

பூக்கன்றுகள், மர உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடிய ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ் காணும் முகவரிக்கு தங்கள் சுயவிபரத்தை அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்,
யாழ்ப்பாணம் தொலைபேசி - 021-222-7944

(17635)



## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 23, டேவிட் வீதி, 113 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திசவீரசிங்கம் பெண் என எலிசபெத் லெவீனா ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

மெர்வின் கியூக் அரியராஜா எதிர்மன்ன சிங்கி (Mervyn Hugh Ariyarajah Edirimanasinghe).யோசெப் லென்னி சுவேந்திரா எதிர்மன்னசிங்கி (Joseph Lennie Suvendra Edirimanasinghe). நளினி கார்மலிற்றா தேவநாயகம் அல்லது எதிர்மன்னசிங்கி (Nalinie Carmelita Thevanayagan nee Edirimanasinghe), அன்ரனிற்றா கிருஸ்ணசிங்கம் அல்லது எதிர்மன்னசிங்கி (Antonette, Krishnasingham nee Edirimanasinghe) ஆகியோர் 25.05.2013 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சாரா எரிக்கா லோரன்ஸ் முகதாவில் 12 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனம் தமது சகோதரி ஏஞ்சலா ஜெனேவி தங்கரஜனி தங்கராசா அல்லது எதிர்மன்னசிங்கி (Angela Genevie Thangarajinee Thambirasa nee Edirimanasinghe) என்பவரின் 65 வருடங்களுக்கு மேலாக நீண்ட நெடுங்கால தங்குதடையற்ற இடையூறற்ற ஆட்சியிலேயே இருந்தது எனவும், அவர் காலஞ் சென்ற பின்னர் தங்களின் ஆட்சியில் இருப்பதாகவும் வெளிப்படுத்தியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை மெர்வின் கியூக் அரியராஜா எதிர்மன்னசிங்கி (Mervyn Hugh Ariyarajah- Edirimansinghe), யோசெப் லென்னி சுவேந்திரா எதிர்மன்னசிங்கி (Joseph Lennie Suvendra Edirimanasinghe). ரெஜினல்ட் ராஜேஸ்வரன் எதிர்மன்னசிங்கி (Reginald Rajeswaran Edirimanasinghe), அன்ரனிற்றா கிருஸ்ணசிங்கம் அல்லது எதிர்மன்னசிங்கி (Antonette Krish nasingham nee Edirimanasinghe) ஆகியோர் 25.05.2013 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சாரா எரிக்கா லோரன்ஸ் முகதாவில் 13 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் நளினி கார்மலிற்றா தேவநாயகம் அல்லது எதிர்மன்னசிங்கி (Nalinie Carmelita Thevanayagam nee Edirimanasinghe) என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவு யாழ்ப்பாணம் மாநகரசபை கிராமசேவையாளர் பிரிவு J/70 இல் குருநகர் கிழக்கில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 113 இனைக் கொண்ட டேவிட் வீதியில் அமைந்துள்ள ஆதனமானது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களால் 2012.12.01 ஆம் திகதி கொண்ட வரைபட இலக்கம் 1194 இல் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட நிலப்பரப்பு ஒன்றும் குளி பத்து தசம் ஏழும் (நில.பர.1ஆம் குளி 10.70)

எல்லைகள்
வடக்கு : ஆதன இலக்கம் 115 இனைக் கொண்ட அன்ரன் கிறகரியின் ஆதனம்.
கிழக்கு : டேவிட் வீதி.
தெற்கு : ஆதன இலக்கம் 111 இனைக் கொண்ட எஸ்.எம்.அல்பிரட் மகள் எம்.எச்.ஜெயவதியின் ஆதனம்.
மேற்கு : அல்போன்சஸ் அன்னெற் இன் ஆதனம் இதடங்கலும், இதைச் சேர்ந்தவைகளும்.

தற்போது நளினி கார்மலிற்றா தேவநாயகம் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது நளினி கார்மலிற்றா தேவநாயகம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர், யாழ்.மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (சி-7540)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஐ.நா மனித உரிமைகள் இயக்குநர் ராஜினாமா



(நியூயோர்க்)
இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் விவகாரம் தொடர்பாக நியூயோர்க்கில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் இயக்குநர் கிரேக் மொகிபேர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக கூறப்படுகின்றது.

இஸ்ரேல் நாட்டின் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த மாதம் 7 ஆம் திகதி, ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் இராணுவம் காசா பகுதிக்குள் அதிரடியாக நுழைந்து ஹமாஸ் அமைப்பின் இலக்குகள் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையேயான மோதல் தொடர்ந்து வருகின்ற நிலையில் இஸ்ரேலின் பதிலடி தாக்குதலில் இதுவரை 9000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர் என ஹமாஸ் அமைப்பின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.


இந்த நிலையில் இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் விவகாரம் தொடர்பாக நியூயோர்க்கில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் இயக்குநர் கிரேக் மொகிபேர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் உயர் ஆணையருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், காசா முற்றுகை விவகாரத்தில் ஐ.நா சபை மற்றும் மேற்கத்தேய நாடுகளின் அணுகுமுறை குறித்து அவர் அதிருப்தி தெரிவித்துள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (5-6)

# உலக வர்த்தக திட்ட...
# நீக்கப்பட்ட நான்கு...

## ஜோ பைடன் தெரிவிப்பு

(வோஷிங்டன்)
காபோன், நைஜீரியா, ...
ஆபிரிக்க வளர்ச்சி மற்று...
என்று அமெரிக்க ஜனா...



அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளை மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் உகாண்டா ஆகிய நாடுகள் தொடர்ச்சியாக மீறுவதால் தான் இந்த நடவடிக்கையை மேற் கொள்வதாகவும் அரசியல் சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதில் நைஜீரியா மற்றும் காபோன் மாறிலங்கள் தொடர்ந்து முன்னேறத் தவறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக திட்டம் 2000ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

இந்த நாடுகளுக்கு ஆபிரிக்க வளர்ச்சி மற்றும் வாய்ப்புச் சட்டம் வர்த்தகத் திட்டத்தின் மூலம்

அ... மில... றது... இந்... கள... எதி... முத... இய...

## காசா அகதிகள் முகாமில் இஸ்ரேல் தாக்குதல்

### 50 பேர் பலி; 150 பேர் காயம்



(காசா)
காசா எல்லையில் அமைக்கப்பட்டு இருந்த அகதிகள் முகாமில், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 50 பேர் உயிரிழந்ததாக ஹமாஸ் அமைப்பின் சுகாதார அமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சகம் வெளியிட்டு இருக்கும் அறிக்கையில், "காசா எல்லைப் பகுதியின் வடக்கு பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த முகாம் ஒன்றில் நடத்தப்பட்ட தாக்

## மீண்டும் இஸ்ரேல் செல்லவுள்ள அமெரிக்க வெளியுறவு மந்திரி



(வோஷிங்டன்)
அமெரிக்க வெளியுறவு மந்திரி ஆண்டனி மீண்டும் நாளை இஸ்ரேல் செல்லவுள்ளார்.


ஹமாஸுக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா தனது ஆதரவை அளித்து வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க வெளியுறவு மந்திரி ஆண்டனி பிளிங்கன் நாளை இஸ்ரேல் செல்லவுள்ளார்.

ஏற்கனவே கடந்த மாதம் 16 ஆம் திகதி இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## ஹமாஸ் அமைப்பின் கோட்டையை கைப்பற்றிய இஸ்ரேல் இராணுவம்

### ஆயுதங்கள் மீட்பு



(காசா)
ஹமாஸ் அமைப்பின் கோட்டை எனப்படும் வடக்கு காசா பகுதியின் மேற்கு ஜபல்யா பகுதியை கைப்பற்றியுள்ளதாகவும் ஹமாஸ் அமைப்பினர் பயன்படுத்திய ஆயுதங்களை மீட்டதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த பிரதேசம் காசாவிற்கு வடகிழக்கே நான்கு கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

ஹமாஸின் கோட்டை என கருதப்படும் இந்த பிரதேசத்தை கைப்பற்றும் முயற்சியில் 50 ஹமாஸ் அமைப்பினர் கொல்லப்பட்டதுடன் ஜபல்யா பிரதேசத்தின் ஹமாஸ் அமைப்பின் தளபதி இப்ராஹிம் பியாரியும் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இந்த கோட்டையில் ஹமாஸ் அமைப்பினர் பயன்படுத்திய பல ஆயுதங்களை மீட்டதாகவும் இஸ்ரேலிய இராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்தார். இஸ்ரேலிய தாக்குதலில் ஏராளமான ஹமாஸ் அமைப்பினர் காயமடைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ட்டத்திலிருந்து
# ங்கு நாடுகள்

நாடுகள் என்று பெயரிட விரும்புவதாக வலியுறுத்து கிறார். அமெரிக்காவும் 35 துணை சஹாரா ஆபிரிக்க நாடுகளும் ஜோகன்னஸ் பர்க்கில் 20 ஆவது ஆபி ரிக்க வர்த்தக மற்றும் பொரு ளாதார ஒத்துழைப்பு மன் றத்திற்காக சந்திக்கும் நிகழ் வும் இந்த மாதம் இடம் பெறும் என்பதும் குறிப்பிடத் தக்கது. (5-6)

)

**ஜீரியா, உகாண்டா மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு ஆகியவை சி மற்றும் வாய்ப்புச் சட்டம் வர்த்தக திட்டத்தில் இருந்து நீக்கப்படும் க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.**

றி றத் வித் ஆம் க்க டம் மம்

அமெரிக்க சந்தைக்கு கட்டண மில்லா அணுகலை வழங்குகி றது.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி இந்த நாடுகளை பயனாளி நாடு களாகக் கருதுவதை முடித்துவிட்டு, எதிர் வரும் 2024ஆம் ஆண்டு முதல் வர்த்தக திட்டத்தின் கீழ் இயங்கும் துணை ஆபிரிக்க




லையில் இருந்த வில், இஸ் க்குதலில் ழந்ததாக பின் சுகா சார்பில் ளது. சுகாதார வளியிட்டு கையில், பகுதியின் அமைக் முகாம் பட்ட தாக்

குதலில் 50இற்கும் அதிக மானோர் உயிரிழந்துள் ளனர்.

மேலும் 150இற்கும் அதிகமானோர் காய மடைந்துள்ளனர். இஸ்ரேல் இந்த தாக்குதல் மூலம் அதிக குடியிருப்புகள் உள்ள பகுதியை குறிவைத்து இருக் கிறது" என்று தெரிவித் துள்ளது.

ஹமாஸ் தெரிவித்து இருக் கும் இந்த குற்றச் சாட்டு குறித்து இஸ்ரேல் தரப்பில் இதுவரை எந்த பதிலும் வழங்கப்படவில்லை. (5-6)

## இந்தியாவில் தீபாவளியன்று பட்டாசு வெடிக்க 2 மணிநேர அனுமதி

(டில்லி)

தீபாவளி பண்டிகை வரு கின்ற 12 ஆம் திகதி கொண்டா டப்பட இருக்கிறது.

இந்நிலையில் இந்தியா வில் பட்டாசு வெடிப்பதால் காற்று மாசு அதிக அளவில் ஏற்படுவதாக வழக்கு தொட ரப்பட்டது. இதையடுத்து இரண்டு மணி நேரம் மட் டுமே பட்டாசு வெடிக்க இந் திய உச்ச நீதிமன்றம் அனு மதி அளித்துள்ளது.

அதனடிப்படையில், தமி ழகத்தில் இந்த ஆண்டு தீபா வளியன்று காலை 6 மணி முதல் 7 மணி வரையும் இரவு 7 மணி முதல் 8 மணி வரை யும் பட்டாசு வெடிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் போது மும்பை மற்றும் டெல்லி ஆகிய மைதா னங்களில் பட்டாசு வெடிக்க இந்திய கிரிக்கெட்டு கட்டுப் பாட்டு சபையினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. (5-6)

## நைஜீரியாவில் படகு கவிழ்ந்து 17 பேர் உயிரிழப்பு, 70 பேர் மாயம்



(அபுஜா)

நைஜீரியாவில் அதிக நபர்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்ததோடு, 70 பேர் மாயமாகியுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவின், தாரபா மாநிலத்தில், உள்ள பெனி ஆற்றில், கடந்த திங் கட்கிழமை அர்டோகோலா மாவட்டத்தின் மீன் சந்தை யில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் படகில் வீடு திரும்பிய போது படகு பாரம் தாங்காமல் நடுவழியில் கவிழ்ந்தது.

தகவலறிந்து மீட்புப் படை யினரும் சம்பவ இடத்திற்கு சென்ற நிலையில், 14 பேர் உயிருடன் மீட்கப்பட்ட நிலை யில், 17 பேர்களின் சடலங் கள் கிடைத்துள்ளன.

73 பேர் ஆற்றில் மாய மாகியுள்ளனர். இதனால் பலி எண் ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகி றது.

இதற்கு முன்னதாக கடந்த ஜூன் மாதம் நைஜர் மாநிலத்தில் 300 நபர்க ளுடன் சென்ற படகு கவி ழ்ந்த விபத்தில் 103 பேர் பலியான சோகம் நிகழ்ந் தமை குறிப்பிடத்தக்கது.(5-6)

## இஸ்ரேலுடனான தூதரக உறவை துண்டித்த பொலிவியா



(சுக்ரே)

காசா மீதான இராணுவ நடவடிக்கையை கண்டித்து இஸ்ரேலுடனான தூதரக உறவுகளை துண்டித்துள் ளதாக பொலிவியா தெரிவித் துள்ளது.

அந்நாட்டின் துணை வெளி யுறவு அமைச்சர் ஃப்ரெடி மாமணி இஸ்ரேலின் நட வடிக்கைகள் "ஆக்கிரமிப்பு மற்றும் சமமற்றது" என்று கண்டனம் தெரிவித்துள் ளார்.

காசா மீதான தாக்குதல் களை அடுத்து இஸ்ரேலு டனான உறவை முறித்துக் கொண்ட முதல் லத்தீன் அமெரிக்க நாடு பொலிவியா ஆகும்.

போர் நிறுத்தத் திற்கு அழைப்பு விடுத்துள்ளதுடன் காசாவிற்கு உதவிகளை அனுப்புவதாகவும் கூறியுள் ளது.

காசா பகுதி மீதான முந் தைய தாக்குதல்களால் துண் டிக்கப்பட்ட உறவை ஒரு தசாப்தத்திற்குப் பிறகு, 2019 இல் அந்த நாடு மீண்டும் ஏற்படுத்திக் கொண்டது என் பது குறிப்பிடத்தக்கது. (5-6)

புள் னர் ட்ட வம் ற்கு றர் ன தை 50 லப் தின் இப் பட்ட தெரி யில் டுத் தாக ய்தி இஸ் ான யம லும் 5-6)

## ஜப்பானிலிருந்து கடல் உணவுகளை இறக்குமதி செய்ய ஆரம்பித்த அமெரிக்கா



(வோஷிங்டன்)

முதல்முறையாக ஜப்பானிலி ருந்து கடல் உணவுகளை இறக் குமதி செய்ய அமெரிக்கா ஆரம் பித்துள்ளது. ஃபுகுஷிமா அணு உலை கழிவுநீரைப் பசிபிக் பெருங்கடலில் ஜப்பான் வெளி யேற்றியதைத் தொடர்ந்து அந்நாட்டு கடல்உணவு களுக்கு சீனா தடை விதித் திருந்தது.

இந்நிலையில், முதல் முறையாக ஜப்பானிலிருந்து கடல்உணவுகளை இறக்கு மதி செய்ய அமெரிக்கா முன்வந்துள்ளது. முதற் கட்டமாக 900 கிலோகிராம் கடல்உணவுகளை இறக்கு மதி செய்த அமெரிக்கா, இரா ணுவ சிற்றுண்டிச்சாலை மற்றும் போர் கப்பல்களில் உள்ள அமெரிக்க வீரர்க ளுக்கு அவற்றை பரிமாற திட்டமிட்டுள்ளது.

ஜப்பானின் மிகப்பெரிய கடல்உணவு இறக்குமதி யாளரான சீனா கடந்தா ண்டு ஒரு லட்சத்து 80,000 தொன் கடல்உணவுகளை இறக்குமதி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான சேவையை மறுசீரமைக்க நடவடிக்கை



(கொழும்பு
ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளதாக விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையைக் கொண்டுள்ளது.

இதற்கமைவாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அச்சு ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்களைப் பயன்படுத்தி இந்த டெண்டர் அழைப்புப் பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. (5-6)

# உலக சந்தையில்
## மசகு எண்ணெய் விலை சரிவு




(வோஷிங்டன்)
ஹமாஸ் தரப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதலை அடுத்து சர்வதேச சந்தையில் அதிகரித்திருந்த மசகு எண்ணெயின் விலை சற்று வீழ்ச்சியை பதிவு செய்து வருகின்றது.

இதன்படி, மசகு எண்ணெயின் விலை நேற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 81.29 அமெரிக்க டொலராக நிலவியது.

பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 87.41 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. மேலும் உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை நேற்று 3.59 அமெரிக்க டொலராக நிலவியது. (5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 300 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 80 | 150 | 150 |
| கோவா | 250 | 220 | 240 | 300 |
| கரட் | 350 | 350 | 350 | 400 |
| பூசணி | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 180 | 200 | 120 | 240 |
| வாழைக்காய் | 200 | 200 | 160 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 360 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 340 | 300 | 350 |
| பாகற்காய் | 450 | 450 | 350 | 500 |
| வெண்டக்காய் | 240 | 200 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 250 | 350 |
| லீக்ஸ் | 200 | 250 | 200 | 300 |
| பீற்றூட் | 140 | 140 | 150 | 240 |
| கறிமிளகாய் | 350 | 350 | 300 | 500 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 300 | 300 |
| போஞ்சி | 400 | 550 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 320 | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1600 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 400 | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 350 | — | 480 |
| முள்ளங்கி | 100 | 120 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 150 | 100 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2956

Search for people, places and things

### மது




### கனோயா




### கபில்




### விமல்




### பிரியா




### பிரபா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரிக்குள வீதியை புனரமைத்து தரக்கோரி மக்கள் மறியல் போராட்டம்

(நெளுக்குளம்)

**வவுனியா, பண்டாரிக்குளம் பிரதான வீதியினை புனரமைத்துத் தருமாறு கோரி அப்பகுதி மக்களினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



பல வருடங்களாக குறித்த வீதி எவ்வித புனரமைப்பும் இன்றி காணப்படுவதுடன், தற்போது குன்றும் குழியு மாக காணப்படுவதினால் பாதையினை பயன்படுத்து வதில் தாம் பல்வேறு இன்னல் களுக்கு முகங்கொடுப்பதாக தெரிவித்தமையுடன் உடனடி யாக இவ் வீதியினை செப்ப னிட்டு தருமாறு கோரியே இப்போராட்டம் இடம்பெற்றி ருந்தது.

வவுனியா, பண்டாரிக் குளம் விபுலானந்த கல்லூரி முன்பாக ஆரம்பமான இவ் கவனயீர்ப்பு போராட்டமானது பண்டாரிக்குளம் பிரதான வீதியூடாக ஊர்வலமாக சென்று புகையிரத நிலைய பிரதான வீதியினை சென்ற டைந்து சிறிது நேரம் குறித்த வீதியினை . வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

போராட்டத்தில் ஈடுபட்டி ருந்தவர்கள் "3000 மாண வர்கள் கல்வி கற்கும் பாட சாலை அமைந்துள்ள பிர தான வீதியினை உடனே புனரமைப்பு செய், ஏமாற் றாதே ஏமாற்றாதே இனியும் ஏமாற்றாதே, மாவட்ட அபி விருத்தி குழு தலைவரே பதில் சொல் நிதி எங்கே?, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், நான்கு கிராம சேவையாளர் பிரிவு மக்கள் துன்பப்படுவது உங்களுக்கு தெரியவில்லையா?"போன்ற பல்வேறு வசனங்களை தாங் கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட னர். (5-6-250)

# வவுனியாவில் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட குழுக்கூட்டம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட ஒரு ங்கிணைப்பு குழுக் கூட்ட மானது பிரதமர் தினேஸ் குணவர்த்தனவின் தலை மையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்ட பத்தில் நேற்று குறித்த கூட்டமானது இடம் பெற் றது.

இதன்போது வன இலா காவிடம் இருந்து காணி விடுவிப்பு மற்றும் நிலப் பயன்பாடு, மாவட்ட கல்வி நிலை, பிறப்பு பதிவு உள் ளிட்ட பல்வேறு விடய ங்கள் தொடர்பாக கலந்து ரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் இரா ஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மாவட்ட அபி விருத்தி குழுத் தலை வரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பின ருமான கு.திலீபன், பாரா ளுமன்ற உறுப்பினர்க ளான செல்வம் அடைக் கலநாதன், வினோதர ராதலிங்கம், சாள்ஸ் நிர் .மலநாதன், வடமாகாண ஆளுநர் பி.எச்.எம். சாள்ஸ், வடமாகாண பிர தம செயலாளர் சமன்ப ந்துல சேன, வவுனியா அரசாங்க அதிபர் சரத் சந்திர மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(5-6)



# 2 கிலோ கேரள கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் கைது

(தருமபுரம்)

வவுனியா பகுதியில் 2 கிலோ கேரள கஞ்சாவு டன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸ் புல னாய்வு பிரிவினருக்கு நேற்று கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய கிளிநொச்சியி லிருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் பய ணித்த சந்தேகநபரிடம் சோதனை நடத்திய போது இரண்டு கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நேற்று வவு னியா பொலிஸ் நிலைய த்தில் ஒப்படைத்து இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்திருப்ப



தாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6-316)

# வன்னி விளாங்குள துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணி



(நெளுக்குளம்)

முல்லை மாவட்டத்தில் வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல த்தில் இவ் வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

முன்னதாக மாவீரர்களுக்கு ஈகை ச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து அக வணக்கம் செலுத்தி மலர் வணக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன இவ் வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் என வும் அனைத்து , உறவுகளையும் கல ந்து கொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங் குமாறும் பணி க்குழுவினர் அறிவித்துள்ளனர். (5-6-299)


## மாநகர சபை அறிவித்தல்

**கோம்பயன் மணல் இந்து மயான சேவைகளுக்கான புதிய கட்டணங்கள்**

1.அமரத்துவம் அடைந்தவர்களின் பூதவுடல்களை விறகில் தகனம் செய்வதற்கு ரூபா- 5,000.00

2. (i) மின்சாரத்தில் பூதவுடல்களை தகனம் செய்வதற்கு (பெரியவர்கள்) (14 வயது முதல்) ரூபா-16,000.00

(ii) மின்சாரத்தில் பூதவுடல்களை தகனம் செய்வதக்கு (சிறியவர்கள்) (14 வயதிற்கு உட்பட்டவர்கள்) ரூபா-8,000.00

3.(i) பூதவுடல்களைப் புதைத்து அடக்கம் செய்வதற்கு- 14 வயது முதல் (நீதிமன்ற கட்டளைகள்/ பொலிஸாரின் வேண்டுகோள்/கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல்/ வைத்தியசாலையின் உரிய அனுமதி கொண்டு வருவன மாத்திரம் ) ரூபா-8,000.00

(ii) பூதவுடல்களைப் புதைத்து அடக்கம் செய்வதற்கு - 14 வயது வரை அடக்கம் செய்தல் ரூபா-6,000.00

4. அகற்றப்பட்ட உடற்பாகங்களைப் புதைப்பதற்கு
(1 Kg-30Kg வரையான பொதி) ரூபா-4,000.00
(30Kg-60Kg வரையான பொதி) ரூபா-8,000.00

5. இறந்த கால்நடைகளைப் புதைப்பதற்கு ரூபா-8,000.00

6.மலர்ச்சாலையில் இருந்து கொண்டு வரப்படும் உடற்பாகக்கழிவுகள், உடைக் கழிவுகள் அகற்றுவதற்கு வாரமொன்றிற்கான கட்டணம் ரூபா-5,000.00

மேற்படி கட்டண அதிகரிப்பு 01.11.2023 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

**ஆணையாளர், யாழ்.மாநகர சபை.** (இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

324





“அப்படி ஏன் நிராசை அடையவேண்டும்? அப்பா! பழையாறை வைத்தியர் தங்கள் உடம்பைக் குணப்படுத்த முடியும் என்று சொல்கிறார்.”

“அவர் சொல்வதை நம்பி நீயும் இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வர ஆள் அனுப்பியிருக்கிறாயாம்! நான் கேள்விப்பட்டேன். மகளே! என் பேரில் உனக்குள்ள பாசத்தை அது காட்டுகிறது.”

“தந்தையிடம் மகள் பாசம் கொண்டிருப்பது தவறா, அப்பா?”

“அதில் தவறு ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட வாஞ்சையுள்ள புதல்வியைப் பெற்றேனே, அது என் பாக்கியம். இலங்கையிலிருந்து மூலிகை கொண்டுவர நீ ஆள் அனுப்பியதிலும் தவறில்லை. ஆனால் இலங்கையிலிருந்து மூலிகை வந்தாலும் சரி, சாவகத் தீவிலிருந்து வந்தாலும் சரி, தேவலோகத்திலிருந்து அமுதமே வந்தாலும் சரி, எனக்கு உடம்பு இந்த ஜன்மத்தில் குணமாகப் போவதில்லை.”

“ஐயையோ! அப்படிச் சொல்லாதீர்கள்!” என்றாள் இளவரசி.

“என் கட்டளையையும் மீறி நீ இங்கு வந்தாயே, அம்மா! அதற்காக உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு நாள் என் மனத்தைத் திறந்து உன்னிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதற்கு இப்போது சந்தர்ப்பம் கிடைத்தது. சொல்கிறேன், கேள்! உடம்பைப் பற்றிய வியாதியிருந்தால் மூலிகை மருந்துகளினால் தீரும். என்னுடைய நோய் உடம்பைப் பற்றியதல்ல மனக் கவலைக்கு மருந்து ஏது?”

“தந்தையே, மூன்றுலகம் ஆளும் சக்கரவர்த்தியாகிய தங்களுக்கு அப்படி என்ன தீராத மனக்கவலை இருக்க முடியும்?”

“கவிகளுடைய அதிசயோக்தியான கற்பனையை நீயும் சொல்கிறாய். குழந்தாய்! நான் மூன்று உலகம் ஆளும் சக்கரவர்த்தியல்ல ஒரு உலகம் முழுவதும் ஆளுகிறவனும் அல்ல. உலகத்தில் ஒரு மூலையில் சிறு பகுதி என் இராஜ்யம். இதன் பாரத்தையே என்னால் சுமக்க முடியவில்லை.”

“தாங்கள் ஏன் சுமக்க வேண்டும், அப்பா! இராஜ்ய பாரத்தைச் சுமப்பதற்குத் தகுந்தவர்கள் இல்லையா? மணி மணியாக இரண்டு புதல்வர்கள் தங்களுக்கு இருக்கிறார்கள். இருவரும் இரண்டு சிங்கக் குட்டிகள் வீராதி வீரர்கள். எப்படிப்பட்ட பாரத்தையும் தாங்கக் கூடியவர்கள்.”

“மகளே! அதை நினைத்தால்தான் எனக்கு நெஞ்சு பகீர் என்கிறது. உன் சகோதரர்கள் இருவரும் இணையில்லா வீரர்கள்தான். உன்னைப் போலவே அவர்களையும் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தேன். அவர்களுக்கு இந்த இராஜ்யத்தைக் கொடுத்தால் நன்மை செய்கிறவனா வேனா என்று சந்தேகப்படுகிறேன். இராஜ்யத்துடன் பெரியதொரு சாபக்கேட்டையும் அவர்களிடம் ஒப்புவித்து விட்டுப் போவது நல்லதென்று சொல்வாயா?”

“அப்படி என்ன சாபக் கேடு இருக்க முடியும், இந்த ராஜ்யத்திற்கு? புறாவுக்காகச் சதையை அளித்த சிபியும், கன்றுக்குட்டிக்காக மகனை அளித்த மனுநீதிச் சோழரும் நம் குலத்து முன்னோர்கள். ‘கரிகால் வளவரும், பெருநற்கிள்ளியும் இந்த ராஜ்யத்தை ஆண்டவர்கள். திருமேனியில் தொண்ணூறும் ஆறும் புண் சுமந்த வீர விஜயாலய சோழர் இந்தச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். காவேரி நதி தீரத்தில் நூற்றெட்டு ஆலயங்கள் எடுப்பித்த ஆதித்த சோழரும், சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்து, பொன்னம்பலமாக்கிய பராந்தகரும் இந்த ராஜ்யத்தை விஸ்தரித்தார்கள். அன்பே சிவம் எனக்கண்டு, அன்பும் சிவமும் தாமாகவே வீற்றிருந்த கண்டராதித்தர் அரசு புரிந்த தர்ம மகாராஜ்யம் இது. இப்படிப்பட்ட ராஜ்யத்திற்குச் சாபக்கேடு என்ன இருக்க முடியும்? அப்பா! தாங்கள் ஏதோ மனப் பிரமையில் இருக்கிறீர்கள்! இந்தத் தஞ்சாவூர்க் கோட்டையை விட்டுத் தாங்கள் புறப்பட்டு வந்தால்.”

“நான் இவ்விடம் விட்டுப் புறப்பட்டால் அடுத்த கணம் என்ன ஆகும் என்று உனக்குத் தெரியாது! அழகிய பழையாறையை விட்டு இந்தத் தஞ்சைக் கோட்டையாகிய சிறையில் நான் சந்தோஷத்துக்காக இருக்கிறேன் என்று கருதுகிறாயா?

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## மணியும் மக்களும்

அழகான சுட்டி பொண்ணு தான் நம்ம பட்டுலு. ஒரு அழகான சிறிய கிராமத்துல பட்டுலுவும் அவங்க அப்பா மோட்டுவும் வாழ்ந்து வந்தனர். அளவான மக்கள் தொகையோட அந்த ஊர் செழுமையாக இருந்தது.

பட்டுலு கிராம மக்கள் அனைவரிடமும் அன்போடு பழகுவா. மக்களுக்கும் பட்டுலுவ ரொம்ப பிடிக்கும். மோட்டுகிட்ட சொல்லுவா,” அப்பா நா படிச்சு பெரிய பொண்ணா ஆகி இந்த மக்களுக்கு நல்லது செய்வேன்”. என்று, மோட்டுவும் பட்டுலுவ அறிவாளி பொண்ணா வளர்த்து வந்தார்.



கிராமம் நிம்மதியா இருந்து வந்தது. ஆனால் அது ரொம்ப நாள் நிலைக்கவில்லை. அந்த கிராமத்தின் எல்லையில் ஒரு அடர்ந்த காடு இருந்தது. கிராமத்திலிருந்த எல்லை கோவிலில் ஒரு தங்கமணி கட்டப்பட்டிருந்தது. ஒருநாள் ஒரு திருடன் அந்த மணியை திருடி கொண்டு காட்டுக்குள் ஓடி விட்டான். ஆனால் துரதிஷ்டவசமாக அன்றே அவனை ஒரு புலி கொன்று தின்றுவிட்டது. கோவிலுக்கு சொந்தமான தங்கமணி காணாமல் போனதில் மக்கள் மிகவும் வருத்தம் அடைந்தனர்.

அன்று இரவு அந்த மணி அடிக்கும் ஓசை கேட்டது. பல பக்கங்களிருந்தும் மணியோசை கேட்பது போல அவர்களுக்கு தோன்றியது. இதைக் கேட்டு கிராம மக்கள் பயந்து போனார்கள். கோவில் மணியை திரும்பபெற தாங்கள் எந்த முயற்சியும் செய்யாததால் எல்லை தெய்வம் கோபித்து கொள்வதாக அந்த மக்கள் எண்ணி கலங்கினர்.

கிராமமக்களின் இந்த நிலையைக்கண்டு பட்டுலு கவலைக் கொண்டாள். தனது அப்பாவிடம் சொல்லி புலம்பினாள். கிராம மக்கள் ஒரு முடிவெடுத்தனர். கிராமத்திலுள்ள ஆண்மகன்கள் காட்டுக்குள் சென்று மணியை தேடிக் கொண்டு வரவேண்டுமென்று. மோட்டுவும் கிளம்ப தயாரானார். அப்போது பட்டுலு, அப்பா நானும் வரேன்.

மணியை கண்டுப் பிடிச்சு கிராம மக்கள சந்தோசப்படுத்தனும்” என்றாள். பட்டுலுவின் எண்ணத்தை கண்டு நெகிழ்ந்த மோட்டு, யாருக்கும் தெரியாமல் பட்டுலுவை மறைத்து கொண்டு சென்றார். கிராம மக்கள் தேட ஆரம்பித்தனர்.

பயத்தினால் யாரும் காட்டின் உட்புறம் செல்லவில்லை. வானம் இருட்ட தொடங்கியது. மணியோ கிடைத்தபாடில்லை. நன்கு இருட்டிய சமயம் அந்த மணியோசை கேட்டது, மக்கள் பயந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதய பூர்வமாகவும் செய்யப் பட்டவையே! – ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நிர்மலா சீதாராமனின் வருகை எம் மக்களுக்கு விடிவைத் தரட்டும்

இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு இங்கு வருகை தந்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்த நிர்மலா சீதாராமன் யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் விஜயம் மேற்கொள்ள உள்ளமை முதன்மைக்குரிய விடயமாகும்.

இந்தியப் பாதுகாப்பு துறை அமைச்சராக இருந்து சாதனை படைத்த நிர்மலா சீதாராமன் தற்போது இந்திய நிதியமைச்சராக இருந்து இந்தியாவின் பொருளாதார எழுச்சிக்கு மூல காரணமாக இருப்பவர்.

இதுதவிர, நிர்மலா சீதாராமன் ஆற்றல் நிறைந்த எங்கள் தமிழகத்தின் பெண் ஆளுமை என்பதில் ஈழத் தமிழர்களாகிய நாம் மிகுந்த பெருமையடைகின்றோம்.

பாராளுமன்றத்திலும் பொதுவெளியிலும் அவர் ஆற்றுகின்ற உரையின் கனதி கண்டு வியப்புறாதார் இல்லை எனலாம்.

அந்தளவுக்கு அவரின் உரைகள் கருத்தாழம் மிக்கவை. தவிர இந்திய மக்களவையில் அவர் தமிழ் இலக்கியங்களை மேற்கோள்காட்டி ஆற்றுகின்ற உரைகள் அற்புதமானவை. அத்தகு மேன்மைக்குரிய இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் வருகை தருவதையிட்டு தமிழ் மக்கள் அகமகிழ்கின்றனர். காரணம் அவர் இந்திய மத்திய அரசில் காத்திரமான அமைச்சர். தவிர பாரதிய ஜனதாக் கட்சியின் தூண். இதற்கும் மேலாக, அநீதி கண்டு பொறுக்காத நெஞ்சுக்கு நீதியானவர்.

அவரின் வருகை தமிழ் மக்களுக்கு விடிவை – தீர்வைத் தரும் என்பதுதான் எம் மக்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்புமாகும்.

ஆம், எங்கள் தமிழ் மக்கள் ஈழத்திருநாட்டில் படுகின்ற துன்பங்கள் கொஞ்சமல்ல.

இன்னமும் அவர்கள் இழப்பின் துயரங்களைச் சுமந்து நிற்கின்றனர். நீதி கிடைக்காமல் ஏங்கி நிற்கின்றனர்.

அந்தோ! உரிமை மறுக்கப்பட்ட இனமாகத் தமிழ் மக்கள் அநாதைகளாக நிற்கின்றனர்.

இந்தியா மனம் வைத்தாலன்றி, தமிழ் மக்களுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் உரிமை தரமாட்டார்கள் என்கின்ற யதார்த்தத்தின் மத்தியில் ஈழத் தமிழ் மக்கள் ஆழமாக நேசிக்கின்ற இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்கு வருகை தருவதானது தமிழ் மக்களின் இன்னல்களை அதிலும் குறிப்பாக தமிழின அழிப்பு யுத்தத்தில் குடும்பத் தலைவர்களை இழந்து எங்கள் பெண்கள் படுகின்ற துன்பங்களை அவர் நேரில் அறியும்போது இனப் பிரச்சினைக்கான தீர்வின் அவசியத்தை அவர் நிச்சயம் இந்திய மத்திய அரசிடம் – பிரதமர் மோடியிடம் எடுத்துரைப்பார்.

அஃது எங்கள் இனம் இந்த மண்ணில் நிம்மதியாக வாழ வழிவகுக்கும் என நம்புகின்றோம்.

## ஐ.எம்.எப் ஐ திருப்திப்படுத்தவே வரி அதிகரிப்பு

# எதிர்வரும் காலங்களில் வாழ்க்கை செலவு அதிகரிக்கும் - நாமல் எம்.பி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்துவதற்காகவே பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் காலங்களில் வாழ்க்கை செலவுகள் அதிகரிக்கும்.

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை முழுமையாக ஆராய்ந்து முக்கிய தீர்மானம் எடுப்போம் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லை பகுதியில் பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின்சார கட்டணம் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மின்கட்டணம் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

உலக சந்தையின் விலைக்கு அமைய தேசிய மட்டத்தில் எரிபொருள் விலையை தீர்மானிக்குமாறு எதிர்க்கட்சியினர் கடந்த காலங்களில் வலியுறுத்தினர்.

எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் விலை ஒவ்வொரு மாதமும் நிர்ணயிக்கப்படும் போது அதற்கு எதிர்க்கட்சிகள் தற்போது எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை எதிர்வரும் 13 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கபடவுள்ளது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வரவு செலவுத் திட்டம் அமைய வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் குறிப்பிட்டுள்ளோம்.

வரவு செலவுத் திட்டத்தை முழுமையாக ஆராய்ந்ததன் பின்னரே பாதீட்டுக்கு ஆதரவு வழங்குவதா.இல்லையா என்பதை தீர்மானிப்போம்.

சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்துவதற்காகவே பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் காலங்களில் வாழ்க்கை செலவுகள் அதிகரிக்கும். இதனால் சமூக கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகள் ஏற்படும்.ஆகவே நாட்டு மக்களின் நிலையில் இருந்துகொண்டு அரசாங்கம் தீர்மானம் எடுக்க வேண்டும்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் இடம்பெறும். பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும்எம்முடன்இணைவார்கள் கூட்டணியாக ஒன்றிணைவோம் என்றார். (ம-7)

## இலங்கை இளநீர்களுக்கு சர்வதேச சந்தையில் கேள்வி

(கொழும்பு)

இலங்கை இளநீர்களுக்கு சர்வதேச சந்தையில் கேள்வி வேகமாக அதிகரித்து வரும் நிலையில், இவ்வாண்டில் இளநீர் ஏற்றுமதி 117 வீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர , தென்னை அபிவிருத்தி சபை , இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகளுடன் இணைந்து இலங்கையில் தென்னை பயிற்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு 11 மில்லியன் இளநீர்களை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் மூலம் 110 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## இந்திய நிதி அமைச்சரை சந்திக்க ஆவலாக உள்ளோம் யாழ். மீனவ சங்கங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து மீனவர் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக யாழ்ப்பாண கிராமிய கடற்தொழில் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து கலந்துரையாடுவோம். நிதி சேகரித்து தமிழகம் சென்றும் கலந்துரையாடவுள்ளோம். இந்திய மத்திய அமைச்சர் யாழ்ப் பாணம் வராது விட்டால் கொழும்பு சென்று சந்திப்பதற்கும் தீர்மானித்துள்ளோம்.

புதிதாக கொண்டுவரப்படவுள்ள கடற்தொழில் சட்ட திருத்த முன்வரைவு தொடர்பான கருத்துக்கள் கோரப்படுகின்றன. நியாயமான விடயங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அமைச்சரவைக்கு சமர்பிக்கவேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை என்றனர். (ம-7)

## நாட்டில் பதிவு செய்யப்படாமல் 2 இலட்சத்துக்கு மேற்பட்ட பாரம்பரிய சின்னங்கள்

(கொழும்பு)

நாட்டில் 2 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாரம்பரிய சின்னங்கள் இருந்தாலும் 17 ஆயிரம் பாரம்பரிய சின்னங்கள் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான பாராளுமன்ற குழு, பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தலைமையில் கூடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது எட்டு இடங்கள் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னாங்களின் பட்டியலில் உலக மரபுரிமையாக உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை எதுவும் தேசிய பாரம்பரிய சின்னாங்களாக அறிவிக்கப் படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தேசிய பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் ஒடுக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் வணக்கத்திற்குரிய இந்துரகரே தம்மரதன தேரர் குறித்த கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாக்க தேசிய மேலாண்மைச் சட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் தலைவர்களும் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

இந்த கலந்துரையாடலில் சிரேஷ்ட பேராசிரியர் வணக்கத்துக்குரிய இந்துரகரே தம்மரதன தேரர், பேராசிரியர் வணக்கத்துக்குரிய மெதகொட அபயதிஸ்ஸ தேரர், தொல்பொருள் துறையின் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மத்துகம செனவிருவான், கலாநிதி வசந்த பண்டார, முன்னாள் தொல்பொருள் ஆணையாளர் பேராசிரியர் செனரத் பண்டார திஸாநாயக்க, கலாநிதி காமினி ஜயவீர, மேஜர் ஜெனரல் விஜித ரவிப்பிரிய, சுனில்சந்திரகுமார, எஸ்.கே.சேனாநாயக்க மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**
**"நீண்டகாலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."**
வாரன் ப.வெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

26

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஏனைய இந்துக் கடவுள்களான முருகன், பிள்ளையார், காளி என்போரும் வழிபடப்பட்டனர். கிராமங்களில், கிராமத்துத் தெய்வமான கண்ணகி புகழ் பெற்று வழிபடப்பட்டதோடு, தெற்கிலுள்ள சிங்களவர் மத்தியிலும் கண்ணகி வழிபாடு பொதுவாகவிருந்தது. மந்திர நம்பிக்கை, தீய ஆவிகளின் இருப்பு ஆகியன தெற்கு ஆசியாவில் காணப்பட்டவாறே அங்கும் காணப்பட்டது.

அரசினுள் பல இந்துக்கோயில்கள் காணப்பட்டன. சில பாரிய வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டு, குறிப்பாக திருக்கோணமலையில் திருக்கோணேச்சரம், மன்னாரில் திருக்கேதீச்சரம், கீரிமலையில் நகுலேஸ்வரம் என்பவற்றோடு நூற்றுக்கணக்கான கோயில்கள் பிராந்தியத்தில் பரந்து காணப்பட்டன. தற்போதைய தென்னிந்தியாவில் உள்ளதைப் போன்ற கொண்டாட்டங்களும் திருவிழாக்களும் காணப்பட சில சிறிய மாற்றத்துடன் காணப்பட்டன. நாயன்மாரின் தேவாரம் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டன. ஏப்ரல் மத்தியில் வரும் இந்து புதுவருடம் மிகவும் முக்கிய கொண்டாட்ட விழாவாகக் காணப்பட்டதோடு, நவராத்திரி, தீபாவளி, சிவராத்திரி, தைப்பொங்கல் என்பனவும் கொண்டாடப்பட்டன. இவற்றுடன் திருமணம், இழவு, பூப்பெய்தல் ஆகியன வாழ்க்கையில் பகுதியாக முக்கியத்துவம் பெற்று இருந்தன.

கிட்டத்தட்ட கி.பி 1550 காலப் பகுதியில் முதலாம் சங்கிலி பௌத்தர்களான சிங்களவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றி, அவர்களின் பல வழிபாட்டிடங்களை அழித்தான். வெளியேறாதிருந்த சிங்களவர்களினால் பௌத்தம் யாழ்ப்பாண அரசில் பாதுகாக்கப்பட்டது. நம்போட்டையில் குறிப்பிடப்பட்ட சில முக்கிய பௌத்த வழிபாட்டிடங்களாக நாகதீபம், தெல்லிப்பழை, மல்லாகம், கதுருகொடை (கந்தரோடை) என்பன இருந்தாலும் நாகதீபத்தில் உள்ள பௌத்த விகாரை மட்டும் இப்போதும் காணப்படுகின்றது.

எல்லாக் கொடுப்பனவுகளும் காசாக மாற்றாமல் அரிசி, வாழைப்பழம், பால், கருவாடு, இறைச்சி, தயிர் எனக் கொடுக்கப்பட்டன. சிலர் "ஊழியம்" என்ற கொடுப்பனவு இல்லாத சேவையைச் செய்தனர்.

அரசன் பலவகையான நாணயங்களை வழங்கினான். சில வகை நாணயங்கள் சேது நந்தி என்று வகைப்படுத்தப்பட்ட, 1284 முதல் 1410 வரையான நாணயங்களின் பெரும் தொகுதி வட இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டன. இந்நாணயத்தின் ஒரு பக்கத்தில் மனித உருவமும் விளக்குகளும் காணப்பட, மறுபக்கத்தில் நந்திதேவர் சின்னம், சேது என்று பொறிக்கப்பட்டுக் காணப்பட, மேலே பிறை நிலவு காணப்பட்டது.

### சட்டங்கள்

ஆரியச்சக்கரவர்த்தி ஆட்சிக் காலத்தில், சமூக சட்ட ஆட்சியானது சமூகத்தின் தாய் மரபாட்சிமுறையையும் ஆழமான தந்தை மரபாட்சி முறை ஆட்சியையும் இணைத்துக் காணப்பட்டதாக அமைந்தது. இச் சட்டங்கள் உள்ளூர் முதலியார்களினால் மரபு வழக்காறுகளுக்கு ஏற்ப விளக்கப்பட்டு இணைத்து காணப்பட்டன. சில சந்தர்ப்பங்களில், குறிப்பாக தற்போதைய கேரளம், துளு நாடு ஆகியவற்றின் மருமக்கட்டயம் சட்டத்திற்கு ஒத்ததாக காணப்பட்டதாக அறிஞர்கள் சுட்டிக் காட்டினர்.

மரபுச் சட்டங்களில் பக்கத்து இந்திய இசுலாமிய, இந்துச் சட்டங்களும் தாக்கத்தை ஏற்படுத்தின. மரபுச் சட்டங்கள் பின்னர் தொகுக்கப்பட்டு 1707 இல் ஒல்லாந்தர் கால ஆட்சியில் தேசவழமைச் சட்டம் என அச்சுப்படுத்தப்பட்டது. [72] ஆரம்ப மரபின் கீழான ஆட்சியில் பெண்களிடமிருந்து பெண்களுக்கு அவை சென்றன. ஆனால், சமூகம் தந்தை மரபாட்சிக்கு மாறியதும் அவை ஆணிடமிருந்து ஆணுக்குச் சென்றது. இதனால், முத்து சம மகன்களுக்கும் வரதட்சணை பெண்களுக்கும் என அமைந்தது.

### யாழ்ப்பாண இராச்சியப்போர்கள்

யாழ்ப்பாண இராச்சியப்போர்கள், என்பது குடியேற்றவாதக் காலத்துக்கு முன்னர் யாழ்ப்பாண மன்னர் காலத்திலும் குடியேற்றவாதக் காலத்தில் பிரித்தானியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் வரையில் இடம் பெற்ற போர்கள் பற்றியது ஆகும். யாழ்ப்பாண மன்னர் காலத்தில், தென்பகுதி இராச்சியமான கோட்டேயில் இருந்தும் பின்னர் இந்தியாவின் சில பகுதிகளில் காலூன்றியிருந்த போர்த்துக்கேயர் தரப்பில் இருந்தும் படையெடுப்புக்கள் நிகழ்ந்துள்ளன. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர், அவர்களை வெளியேற்றும் நோக்குடன் தஞ்சாவூரில் இருந்தும் கண்டி இராச்சியத்தில் இருந்து படையெடுப்புக்கள் நிகழ்ந்தன.

இறுதியில் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்து போர்த்துக்கேயரை வெளியேற்றினர். இதன் பின்னர் 140 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரித்தானியர் யாழ்ப்பாணத்தைத் தாக்கி அதனைக் கைப்பற்றினர்.

### போர்களின் பட்டியல்

- கோட்டை இராச்சியத்தின் யாழ்ப்பாணப் படையெடுப்பு - 1449-50, 1453-54
- கனகசூரிய சிங்கையாரியனின் யாழ்ப்பாண மீட்புப்போர் - 1467
- போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணப் படையெடுப்பு முயற்சி (1544)
- போர்த்துக்கேயரின் முதலாவது யாழ்ப்பாணப் படையெடுப்பு - 1560
- போர்த்துக்கேயரின் இரண்டாவது யாழ்ப்பாணப் படையெடுப்பு - 1590
- போர்த்துக்கேயரின் மூன்றாவது யாழ்ப்பாணப் படையெடுப்பு - 1619
- போர்த்துக்கேயரை வெளியேற்றுவதற்கான தஞ்சாவூர்ப் படையெடுப்புக்கள் - 1619
- போர்த்துக்கேய யாழ்ப்பாணத்தின் மீதான கண்டியரசின் படையெடுப்பு - 1629
- யாழ்ப்பாணத்தின் மீதான ஒல்லாந்தர் படையெடுப்பு - 1658
- யாழ்ப்பாணத்தைப் பிரித்தானியர் கைப்பற்றல்-1796.

### கோட்டகமைக் கல்வெட்டு

கோட்டகமைக் கல்வெட்டு என்பது இலங்கையின் கேகாலை மாவட்டத்தில் கம்பளைக்கு அண்மையில் உள்ள கோட்டகமை என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தமிழ்க் கல்வெட்டு ஆகும். 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இந்தக் கல்வெட்டு அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்தி வம்ச அரசன் ஒருவன் போரொன்றில் பெற்ற வெற்றியைக் குறிக்க எழுதுவிக்கப்பட்டது.

இக்கல்வெட்டு நான்கு வரிகளைக் கொண்ட ஒரு பாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளது. இப்பாடல் சிங்கையாரிய மன்னனின் பெருமை பேசுவதாக அமைந்துள்ளது. பாடல் தொடங்குவதற்கு முன்மேல் வரிசையில் "சேது" என்னும் யாழ்ப்பாண மன்னர்களின் அடையாளச் சொல் காணப்படுகிறது. இதை, இக்கல்வெட்டு யாழ்ப்பாண அரசனின் ஆணையின்படியே வெட்டப்பட்டது என்பதற்குச் சான்றாகக் காட்டுகின்றனர்.

கல்வெட்டின் உள்ளடக்கத்தின் பொருள் சிங்கையாரியனுக்கு அடங்காத சிங்களத் தலைவர்களுடைய மனைவிமார் கண்ணீர் விட்டுத் தமது நெற்றியில் இருந்த பொட்டை அழித்தனர் என்பதாகும். இது சிங்கையாரியன் சிங்கள நாட்டில் நடந்த போரில் வெற்றி பெற்றதைக் குறித்துக் காட்டுகிறது. சிங்கையாரியன் என்பது 13 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தை ஆண்ட அரச வம்சத்தைச் சேர்ந்த அரசர்களுக்கான பொதுப்பெயர் என்பதால் இக்கல்வெட்டில் இருந்து குறிப்பாக எந்த யாழ்ப்பாண அரசன் வெற்றி பெற்றவன் என்பதை அறிய முடியாது.

14ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியளவில் இலங்கையில் இருந்த அரசுகளில் யாழ்ப்பாண அரசு வலிமை பொருந்தியதாக இருந்தது. அக்காலத்தில் கம்பளை சிங்கள அரசின் தலைமையிடமாக விளங்கியது. உள்பிரச்சினைகளால் சிங்கள அரசு வலிமை குன்றியிருந்ததால், அதன் ஆட்சிப் பகுதி முழுவதிலும் முழுமையான கட்டுப்பாட்டை வைத்திருக்க முடியவில்லை. பராக்கிரமபாகுவின் மருமகன் கம்பளையிலும் முதலமைச்சர் அழகக்கோனார் றைகமையிலும் இருந்தனர். யாழ்ப்பாண அரசர்கள் இவர்களிடம் இருந்து திறையும் பெற்று வந்தனர். 1340களை அண்டி ஒரு அரசாகவே செயற்பட்டு வந்த அழகக்கோனார் இப்போது கோட்டே இருக்கும் பகுதியில் ஒரு கோட்டையைக் கட்டி அதைப் பலப்படுத்தினான். ஆயுதங்களையும் படைகளையும் திரட்டிப் போதிய வலிமை பெற்ற பின்னர் திறைகொடுக்க மறுத்து, யாழ்ப்பாணத்தில் இருந்து திறை பெறச் சென்ற தூதுவர்களைப் பிடித்துத் தூக்கில் இட்டான். யாழ்ப்பாண அரசன் சிங்கள அரசின் மேல் போர்ப் பிரகடனம் செய்து, நிலம் வழியாகவும் கடல் வழியாகவும் இரண்டு பிரிவுகளாகப் படைகளை அனுப்பினான். நிலம் வழியாகச் சென்ற படை மாத்தளையை அடைந்தது. சிங்கள அரசன் கம்பளையில் இருந்து தப்பிச் சென்றான். கடல் வழியாக வந்தபடைகள் கொழும்பிலும் பாணந்துறையிலும் இறங்கின. சிங்கள நூலான இராசவழி, கடல் வழியாக வந்து இறங்கிய யாழ்ப்பாணப் படைகளை அழகக்கோனாரின் படைகள் எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியுறச் செய்ததுடன், பாணந்துறையில் நின்ற யாழ்ப்பாணக் கப்பல்களையும் எரித்து விட்டன என்றும் மக்கள் ஒன்றிணைந்து மாத்தளையில் இருந்த யாழ்ப்பாணப் படைகளையும் தோற்கடித்தனர் என்றும் கூறுகிறது.

கோட்டகமைக் கல்வெட்டின் உள்ளடக்கம் சிங்கள நூல்களின் கூற்றில் ஐயத்தை ஏற்படுத்துகிறது. மேற்குறித்த போரில் சிங்களப் படைகள் பெற்ற வெற்றி இராஜாவளியால் மிகைப்படுத்தப்பட்டது என்றே தெரிகிறது. யாழ்ப்பாணப் படைகள் சில இடங்களிலாவது வெற்றி பெற்றிருக்காவிட்டால் இவ்வாறான கல்வெட்டைப் பொறித் திருக்க முடியாது என்று சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தலைமன்னார்...

சிவில் விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் படவுள்ளதாக கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவன் சந்திர தெரிவித்தார்.

இந்தியாவின் இராமேஸ்வரத்திற் கும் தலைமன்னாருக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம் பிப்பதே இதன் நோக்கமாகும்.

இந்தக் கப்பல் சேவையை இலாப மீட்டும் செயற்றிட்டமாக மாற்றுவது தொடர்பில் கலந்துரையாடப்படுவதாக வும் கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

துறைமுகமாக அறிவிக்கப்பட்ட தன் பின்னர் தலைமன்னாரின் உட் கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்து வதற்கும் ஆராய்வதாக தெரிவிக்கப் பட்டது. (ம-7)

## முல்லையில்...

யில் வெடிக்காத நிலையில் காணப் பட்ட ஐந்து ஷெல்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு பின்பாக வுள்ள விளையாட்டு மைதானத்தினை நேற்று சுத்தப்படுத்தும் நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வெடி பொருட்கள் இருப்பது தொடர்பாக முள்ளியவளை பொலிஸாருக்கு தக வல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலி ஸார் அப்பகுதியில் காணப்பட்ட ஷெல் கள் ஐந்தினை மீட்டதுடன், அதனை செயலிழக்க செய்வதற்கான நடவடிக் கைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,299)

## மாவீரர் நினைவுத்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபியை துப்புரவு செய்யும் பணிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாண வர்கள் நேற்று ஈடுபட்டனர்.

அதன்பின் தூபியில் ஈகச்சுடர் ஏற்றி மாணவர்கள் மரியாதை செலுத்தினர். (ம-7,33,104)

## நாடளாவிய...

புறக்கணிப்பை முன்னெடுக்க திட்ட மிட்டுள்ளனர் .

இன்று ஊவா மாகாணத்திலுள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளின் மருத்துவர்கள் அடையாள பணிப்புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இதனையடுத்து முறையே நவம்பர் 03, 06 மற்றும் 07 ஆம் திகதிகளில் வட மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங் களின் மருத்துவ அதிகாரிகள் அடை யாள பணிப்புறக்கணிப்பை நடத்த வுள்ளனர்.

நவம்பர் 08ஆம் திகதி மத்திய மற் றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவ அதி காரிகள் அடையாள பணிப் புறக் கணிப்பை நடத்தவுள்ளனர் .

நவம்பர் 09ஆம் திகதிகளில் தென் மற்றும் வடமத்திய மாகாணங்களின் மருத்துவ அதிகாரிகளும் நவம்பர்-10 ஆம் திகதிகளில் மேல் மாகாணத்தின் மருத்துவ அதிகாரிகளும் அடையாள பணிப் புறக்கணிப்பை நடத்தவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நவம்பர் 13...

சட்டமூலம்) எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரி வித்தார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபே வர்தன தலைமையில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு கூடிய போதே இது தொடர்பில் இணக்கம் காணப்பட் டது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி திங் கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், 2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை இரண்டாம் மதிப்பீடு எனப்படும் 'வரவு - செலவுத் திட்ட உரை' பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப் படவுள்ளது.

அதன்பின்னர், நவம்பர் 14 முதல் 21 வரை ஞாயிறுக்கிழமைகள் தவிர்ந்து 7 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (வரவு - செலவுத் திட்ட) இரண்டாம் மதிப் பீடு மீதான விவாதம் இடம்பெறவுள் ளது.

அத்துடன், வரவு - செலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான வாக் கெடுப்பு நவம்பர் 21ஆம் திகதி செவ் வாய்க்கிழமை பி.ப.6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதையடுத்து, குழுநிலை விவாதம் நவம்பர் 22 ஆம் திகதி புதன்கிழமை முதல் டிசம்பர் 13ஆம் திகதி புதன் கிழமை வரை ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்து 19 நாட்கள் இடம்பெறவுள் ளது.

அதற்கமைய, 2024 நிதியாண்டுக் கான வரவு - செலவுத்திட்ட மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வரவு - செலவுத்திட்ட விவாதத்தின் போது ஒவ்வொரு நாளும் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை விவாதம் இடம்பெறவுள்ளதுடன், வாக் கெடுப்பு இடம்பெறும் நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 6.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் இடம்பெறும்" என்றார். (ம-7)

## தேர்தலைப்...

போட்டு அதில் அரசியல் நடத்த எவ ருக்கும் இடமளிக்க மாட்டோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர் தல்களை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருக் கின்றது. தேர் தல்களுக்கு அஞ் சும் கட்சி எமது கட்சி அல்ல" என வும் அவர் கூறி யுள்ளார்.

அரசியலமைப் பின் பிரகாரம் 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர் தல் உறுதியாக நடைபெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.கவின் தேசிய மாநாட் டில் கூறியிருந் தார்.

என்றாலும், பாராளுமன்றத் தேர்தலை மறுசீர மைப்புக்கு யோசனை யொன்றை அண் மையில் நீதி அமைச்சர் விஜே தாஸ ராஜபக்ஷ, அமைச்சரவைக்கு முன்மொழிந்தி ருந்ததுடன், அதற்கு அமைச் சரவை அங்கீ காரமும் கிடைக் கப் பெற்றது. தேர் தல்முறையை மறு சீரமைக்கும் யோசனைகளை முன்மொழிய விசேட குழு வொன்று ஜனாதி பதியால் நியமிக் கப்பட்டுள்ளமை யும் சுட்டிக் காட் டத்தக்கது. (ம-7)

## நிர்மலா...

யுடன் கலந்துரையாடவுள்ளார்.

இச்சந்திப்பில் சிவபூமி அறக் கட் டளை அமைப்பாளர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் பங்கேற்பார். (ம-7)

## புதிய...

தீர்மானித்துள்ளது.

கியூ.ஆர் குறியீட்டுடன் கூடிய டிஜிட் டல் மயமான சாரதி அனுமதிப்பத் திரத்தினை அறிமுகப்படுத்தும் திட்ட மானது இந்த மாதம் அமைச்சரவை அனுமதியைப் பெற்றதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்படும் என மோட் டார் போக்குவரத்துத் திணைக்களத் தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3527
சீட்டிழுப்பு திகதி 01.11.2023
J 07 12 31 67
J 43592

தன நிதானய
திகதி - 2023.11.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1315
U 35 63 71 72 U
26072

லக்கி 7
திகதி 01.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0111
L7 இலக்கம் 2 8
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
துலாம் 6 7 9 4 1 4

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.01
சீட்டிழுப்பு இலக்கம் 594
கடகம் 08 11 28 51 கடகம்

மெகா பவர்
திகதி 01/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1633
C 04 05 25 37 77
49461

மஹஜன சம்பத
திகதி 2023/11/01
சீட்டிழுப்பு இலக்கம் 5285
P 3 0 2 7 8 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2259 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.11.01 தினம் புதன்கிழமை
02 38 42 76 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,870,372.00

சனிதா Shanida
திகதி 2023.11.01 வெற்றி வாரம் 4420
49 51 57 66 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,493,388.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3971 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.11.01 தினம் புதன்கிழமை
09 20 60 62 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-

கப்ருக
திகதி 01.11.2023 வெற்றி வாரம் 1435
D 27 11 19 21 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 459,566,254.20
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
திகதி 2023.11.01 வெற்றி வாரம் 1970 வர்ணம் மஞ்சள்
12 39 43 57 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,262,808.00

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2085
சீட்டிழுப்பு திகதி: 2023.11.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,997,768/-
02 52 65 73 W

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17618)

076 825 7716 (ஆகாஸ்)

## இலங்கை வந்தார்...

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்தடைந்துள்ளார்.

அவரது இந்த விஜயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர்களையும் சந்திக்க உள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர்களுடனான சந்திப்புகள் இடம்பெறவுள்ளன.

கண்டிக்கு நேற்று விஜயம் செய்த நிர்மலா சீதாராமன் கண்டி மல்வத்தை மகாநாயக்கரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றார்.

அவர் யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் இன்று வருகை தருகிறார். காலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு பின்னர் State Bank of India வின் கிளையை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கிறார். அதனையடுத்து யாழ். கலாசார மையத்துக்கு பயணம் செய்யும் அவர், அங்கு ஒரு நிகழ்வில் பங்கேற்கிறார்.

அதன் பின் யாழ். பொது நூலகத்துக்கு சென்று அதனைப் பார்வையிடுவார். அதன்பின்னர் அவர் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அலையன்ஸ் எயார் விமானம் ஊடாக சென்னைக்கு திரும்புகிறார். (ம-7)

**வேலை வாய்ப்பு**

சண்டிலிப்பாய், சுன்னாக பிரதேசத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு வரவேற்பாளர், கணினி தரவு பதியுனர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
வயது எல்லை 18-24 வரை
(பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்)
WhatsApp மூலம் BIO DATA வை அனுப்பி வைக்கவும் 077 99 062 99

**ENGLISH for Gr. 6 - O/L**
P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng
NEWTON Group Classes
18/18, Wyman Road, Nallur. (17631)
TP: 077 792 3653

**கட்டடம் வாடகைக்கு கொடுக்கப்படும்**
யாழ்நகர் கச்சேரிக்கு அண்மையாக புதிதாக கட்டப்பட்ட 6000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட கட்டடம் வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு : (17640)
077 355 1631

**IELTS** Academic General UKVI
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 18)
DMI COMPUTER EDUCATION 0777 17 35 17
A1 IELTS Life Skills திருமணம் செய்து UK செல்வோருக்கானது
B1 Skilled Worker Visa மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 4/11/2023-SAT 6/11/2023-MON 9 am or 3 pm
German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deutsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-7542)
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403
நெல்லியடி 021 226 2470 0777577333 | சாவகச்சேரி 021 227 0775 0777227074 | சுன்னாகம் 021 224 1970 0776032300 | சண்டிலிப்பாய் 021 225 6665 0761354503 | கிளிநொச்சி 021 228 5655 0776398096

**அமெரிக்க லொத்தர் விசா**
☆ இன்னும் 5 நாட்கள் மட்டுமே
☆ பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
☆ அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. (17621)
077 755 4528

**VILLAGE HOTEL**
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)
T.P:077 544 8503

**அமெரிக்க அதிஸ்ட விசா**
இன்னும் 03 நாட்களில் நிறைவடைகின்றன
LOADING
0768226244
நீங்களும் அமெரிக்காவில்...
வெளிநாடு செல்வது எனது இலட்சியம் எனது குடும்ப பொருளாதார வசதியை பொறுத்தவரையில் அது கனவு. எனது இலட்சியத்தினையும் கனவினையும் ஒரு கணத்தில் நிறைவேற்றிய V2 Travels க்கு எனது இதயபூர்வமான நன்றிகள்.
V2 Travels (C-7544)
V2 TRAVELS

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7544)
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777


**மலிவு விற்பனை**
SILVER SHIELD
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7511)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 25 பரப்பு 14 குளி காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 3 1/2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km, திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.




பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (17639)

077 814 7389, 077 986 5457

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org